*2020 பிப்ரவரி 18]*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. உரிமை மீறல் பிரச்சினை

### இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது குறித்து மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் 8-1-2020 அன்று தெரிவித்த கருத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உரிமைப் பிரச்சினை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது தொடர்பாக 8–1–2020 அன்று அவையிலே நடைபெற்ற விவாதத்தின்போது, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து குறித்து, அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை பேரவை விதி 219–ன்கீழ், அவையில் எழுப்புவதற்கு அனுமதி கோரி அறிவிப்பு கொடுத்துள்ளார். அவருக்கு நான் அனுமதி வழங்குகிறேன். பேரவை விதி 223–ன்கீழ் பேரவையின் தலையீடு ஏன் அவசியமாகிறது என்பது குறித்து சுருக்கமாக விளக்கமளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

**திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது 8 ஆம் தேதி நடைபெற்ற விவாதத்தில், இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது என்பது சாத்தியமில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச்சொன்னபோது, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்*

[திரு. தங்கம் தென்னரசு] [2020 பிப்ரவரி 18

குறுக்கிட்டு, 'இல்லை, இல்லை, அது சாத்தியம்தான். இரட்டைக் குடியுரிமை வழங்க முடியும்' என்ற கருத்தை இங்கே தெரிவித்தார். ஆனால், இந்தியக் குடியுரிமைச் சட்டம், 1955-ன் அடிப்படையில் இரட்டைக் குடியுரிமை வழங்கக்கூடிய வாய்ப்பே கிடையாது. அதற்கு சட்டத்திலே இடமே இல்லை என்று பாராளுமன்றத்தில் மத்திய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

முற்பகல் 11-30

எனவே, எங்களைப் பொறுத்தமட்டில், இரட்டைக் குடியுரிமை சாத்தியமேயில்லை, சட்டத்தில் இடமில்லை என்று தெரிந்ததற்கு பிறகும், இந்த விஷயத்தில், இலங்கைத் தமிழர்களாக அங்கேயிருந்து இங்கே வந்து—பல்வேறு துயரங்களை அனுபவித்து—அவர்கள் சட்ட விரோதமாக இங்கே குடியிருக்கிறார்கள் என்ற அந்த சட்டத்தை, அந்த விதியை நீக்கி அவர்களுக்கு இந்தியாவிலேயே குடியுரிமை—இப்போதிருக்கக்கூடிய குடியுரிமைச் சட்டத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட வேண்டுமென்பது, இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கையாக இருக்கிறபோது, அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டுமென்று, இல்லாத பூனையை இருட்டு வீட்டிலே தேடிக் கொண்டிருப்பதைப்போல நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே ஒரு தவறான தகவலை இங்கே சொல்லி, அந்தத் தகவலும் நாடாளுமன்றத்திலேயே மத்திய உள் துறை அமைச்சர் அவர்களாலே மறுக்கப்பட்டு, இன்றைக்குத் தெளிவுரை கொடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, வேண்டுமென்றே, இந்த விஷயங்களெல்லாம் தெரிந்திருந்தும்கூட, இலங்கைத் தமிழர்கள் இங்கே நிரந்தரமாகக் குடியுரிமை பெற்றுவிடக் கூடாது, அவர்களுக்குரிய அந்தப் பலன் அவர்களுக்குக் கிடைத்துவிடக் கூடாது என்ற உள்நோக்கத்தோடு இந்த அவையை தவறாக வழிநடத்தி இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்மீது இந்த அவையில், அவர் தவறான தகவலைக் கொடுத்ததற்கும், தவறாக வழிநடத்தியமைக்கும், அவர், OCI என்று சொல்லக்கூடிய Overseas Citizenship of India என்கின்ற அந்தப் பிரச்சினையையும், இரட்டைக் குடியுரிமையையும் தவறாகப் புரிந்துகொண்டு, அதற்குத் தேவையற்ற பல்வேறு விளக்கங்களைச் சொல்வதாக, இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு, இங்கே வந்திருக்கக்கூடிய தமிழர் நலனுக்கு

*2020 பிப்ரவரி 18]* [திரு. தங்கம் தென்னரசு]

*முற்றிலும் ஊறுவிளைவிக்கக்கூடிய வகையில், அவருடைய விளக்கங்களும், இந்த அவையில் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துகளும் இடம்பெற்றிருக்கக்கூடிய காரணத்தால், பேரவை விதி 219-ன் அடிப்படையில் அவர்மீது உரிய நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கே கேட்டுக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்த அவையின் வேறொரு உறுப்பினர் குறித்த பிரச்சினை என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் விளக்கம் அளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் தமிழக ஆளுநர் அவர்களால், ஜனவரி 6 ஆம் தேதி அன்று ஆற்றிய உரையில் குறிப்பிடப்பட்ட ஒரு கருத்தைக் குறித்து இந்த விவாதம் தொடங்கியது. கவர்னர் அவர்கள், 13-வது பக்கம், 13-வது பத்தியில், 'இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டுமென தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்தும்' என்ற கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடுத்த இரண்டு நாட்களில் இந்த அவையில் இந்தக் கருத்தை பதிய வைத்தார். தி.மு.க.-வுக்கும், அ.தி.மு.க.-வுக்கும் ஓர் அடிப்படை வித்தியாசம் இருக்கிறது, இலங்கைத் தமிழர் பிரச்சினையில், இலங்கைத் தமிழர்கள் இங்கே அகதிகள் முகாமில் இருக்கிறவர்களுக்கும், அகதிகள் முகாமிற்கு வெளியில் இருக்கும் 32,000 பேருக்கும் இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டுமென்பது கலைஞர் அவர்களுடைய கருத்து, தி.மு.க.-வுடைய கருத்து.*

*ஆனால், அ.தி.மு.க.-வுடைய கருத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அவையில் பதிய வைத்த கருத்து என்னவென்றால், அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும். அம்மா அவர்கள் ஜூன் மாதம் 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது, இரட்டைக் குடியுரிமை எதற்காக வழங்க வேண்டுமென்பதை அழகாக விளக்கியிருக்கிறார். இங்கே இருப்பவர்கள் எத்தனை பேர்? இந்த* issue*-வுடைய ஆதி, அந்தம் என்ன என்பதை எழுத்து வடிவில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கு பாரதப் பிரதமரிடம் கொடுத்திருக்கிறார்கள்.*

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 3 விதமாக இலங்கைத் தமிழர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். நீங்கள் சொன்ன அந்தக் குழப்பம் என்ன என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். 1964–ல் முதல் முறையாக வந்தனர். 1974–ல் இந்தியா–இலங்கை ஒப்பந்தம் போடப்பட்டு, அதில் 9,75,000 தமிழர்கள் நாடற்றவர்களாக, no State or Stateless என்று அங்கே classify செய்யப்பட்டு, அதில் 6 இலட்சம் பேரை இந்தியா ஏற்றுக்கொள்ளும். 3,75,000 பேருக்கு இலங்கை, குடியுரிமை தரும் என்று ஒப்பந்தம் போடப்பட்டது. அதற்குப் பிறகு, 1983–ல் உள்நாட்டு கலவரம் வெடிக்கும்வரை 4,61,432 பேருக்கு இந்தியா குடியுரிமை வழங்கியிருக்கிறது. இதையும் அதே உள் துறை அமைச்சர் அதே பேச்சில் எடுத்துச் சொல்லியிருக்கிறார். பாராளுமன்றத்தில் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களின் கேள்விக்கு பதில் கொடுத்திருந்த உள் துறை அமைச்சர் தெளிவாக அதைச் சொல்லியிருக்கிறார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதை எடுத்துச் சொன்னார்கள் என்றால், camp–ல் வந்தவர்கள், இப்பொழுது இருப்பவர்கள் எத்தனை பேர்? 113 camps முதலில் இருந்தன, இப்பொழுது 107 camps இருக்கின்றன. அந்த 107 camps–ல் இருக்கிற அகதிகள் refugees என்று classify செய்யப்பட்டவர்கள். இதில் பெரிய குழப்பம் எதில் வருகிறது என்றால், Refugees என்றால் என்ன, Repatriates என்றால் என்ன என்பதில்தான். இதற்கு High court இப்பொழுது தீர்வு வழங்கியிருக்கிறது. சென்ற ஜூன் மாதம் கோட்டப்பட்டு camp–ல் போட்ட case–ல், அதற்கான விளக்கத்தை ரொம்ப அழகாக Judge தீர்ப்பில் கொடுத்திருக்கிறார்.

முற்பகல் 11–35

மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன முதல் கருத்து 4,61,432 பேருக்கு நாம் இங்கே குடியுரிமை தந்திருக்கிறோம். அதிலே ஒரு gap இருக்கிறது என்பதுதான் இவர்களுடைய கோரிக்கை. டாக்டர் இளம்பரிதி அவர்களை specific ஆக quote செய்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். டாக்டர் இளம்பரிதி ஓர் ஆராய்ச்சியாளர். அவர் அகதிகள் முகாம்களுக்குச் சென்று பார்த்து, அகதிகள் முகாம்களில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், வெளியே எவ்வளவு பேர் இருக்கிறார்கள்; இதில் claim என்னவென்றால், அந்த 4,61,432 பேருக்கு நீங்கள் குடியுரிமை வழங்கியிருக்கிறீர்கள்; அதிலே இன்னும் 1,39,000 பேருக்கு gap இருக்கிறது. முகாமுக்குள் இருக்கின்ற மற்றும் வெளியே இருக்கின்றவர்களையும் சேர்த்து அனைவருக்கும் இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. அகதிகள் முகாம்களிலும்,

வெளியிலும் இருப்பவர்களுக்காக டாக்டர் இளம்பரிதி அவர்கள் வைக்கின்ற கோரிக்கை இதுதான்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இலங்கைக் குடியுரிமையை இழந்து இந்தியக் குடியுரிமையை அவர்கள் பெறுவது என்பது, அவர்கள் தங்கள் சொத்து, சுகங்களை மீட்டெடுப்பதற்கான வாய்ப்பே இல்லை என்றாகிவிடும் என்பதுதான். அ.தி.மு.க.-வின் கருத்தும் அதுதான். அகதிகளாக இங்கு வந்த ஒரு இலட்சம் பேர்களில் camp-ல் தற்பொழுது இருப்பவர்கள் 59,000 பேர்தான். United Nations High Commissioner for Refugees மூலமாக 10,000 பேர் அங்கே திரும்பிச் சென்றிருக்கிறார்கள். மீண்டும் வந்து, இங்கிருந்து பல நாடுகளுக்குச் சென்றவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் சேர்த்துதான் 40,000 பேர்; இதுதான் அந்த அகதிகள் முகாம்களில் எண்ணிக்கை குறைந்திருப்பதற்குக் காரணம். இன்னொன்று, அகதிகள் முகாம்களில் அவர்களுக்கான அனைத்தையும் செய்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். பாராளுமன்றத்தில் தொடுத்த கேள்விக்கு என்ன பதில் சொல்லியிருக்கிறார்கள் என்றால், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. மோடி அவர்கள், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் என்ன காரணம் என்று கேட்டிருந்தார். அதற்கு விளக்கம் சொல்வதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதிலே குறுக்கிட்டுப் பேசுவதற்கு யாருக்கும் வாய்ப்பு இல்லை. அமைதியாக இருங்கள். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் அந்த இடத்திற்குப் போய் குடியேறி, தங்களுடைய சொத்து சுகங்களை மீட்டெடுக்கும் வாய்ப்பை உருவாக்குவதற்காக, 50,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, அம்மா அவர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக ரூ.1,372 கோடி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் முடிவு செய்து, அங்கு

[திரு. க. பாண்டியராஜன்] [2020 பிப்ரவரி 18

நேரில் சென்று 46,000 வீடுகளைத் திறந்து வைத்தார். அதேபோல, அவர்களுக்கு என்னென்ன செய்திருக்கிறோம் என்பதையெல்லாம் பட்டியலிட்டுச் சொல்லி, மேலும் என்ன சொன்னார்களென்றால், அந்த இடத்தில் இருக்கின்ற வசதியும், வாய்ப்பும் மீண்டும் வரும்பொழுது, இங்கே இருப்பவர்கள் அங்கே சென்று தங்களது குடியுரிமையை மீட்டெடுத்து அங்கு போக வேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாவதாக, அகதிகளாக வருபவர்கள் வேறு; Repatriates ஆக வருபவர்கள் வேறு. தாயகம் திரும்புபவர்கள் என்பதற்கு தனி classification. நீதிமன்றத்தில் கடந்த 2019, ஜூன் மாதம், திருச்சி மாவட்டம், கோட்டப்பட்டு என்ற இடத்தில் உள்ள 68 முகாம்களில் உள்ளவர்கள் தொடுத்த வழக்கில் மாண்பமை நீதிபதி இதற்குத் தெளிவாக விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். இதற்கான முழு authority மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. இந்த வழக்கில் மத்திய அரசாங்கம் முடிவெடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு direction கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் Repatriates-ஆ அல்லது Refugees-ஆ என்று classification செய்ய வேண்டியது மத்திய அரசாங்கத்தின் முழு ஆளுகைக்குட்பட்ட ஒரு விஷயம். அதையும் மாண்பமை நீதிபதி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

நாங்கள், அ.தி.மு.க.-ல் என்ன கேட்கிறோம் என்றால், அம்மா அவர்களின் வார்த்தைகளில் சொல்லப்போனால், அவர்கள் இங்கே business செய்வதற்கும், அவர்களுக்கு இங்கே வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும் அவர்களுக்கு என்ன குடியுரிமை தேவைப்படுமோ அதையும் தாருங்கள் என்பதுதான். அதிலும் இரண்டு classifications இருக்கின்றன. ஒன்று dual citizenship; அங்கேயும் ஓட்டு போடலாம்; இங்கேயும் ஓட்டு போடலாம் என்பது dual citizenship. *(குறுக்கீடு)* முடித்துக்கொள்கிறேன். இரண்டாவது, ஒரே citizenship; citizen of India. *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியாதது இல்லை. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் அவை உரிமை மீறல் பிரச்சினை தொடர்பாகக் கேட்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. *(குறுக்கீடு)* நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* உரிமை மீறல் பிரச்சினையில் அறிவிப்பு

*2020 பிப்ரவரி 18]* [பேரவைத் தலைவர்]

கொடுத்த உறுப்பினருக்குத்தான் நான் பேசுவதற்கு அனுமதி அளித்திருக்கிறேன். அனுமதிக்கப்பட்டவர் பேசி முடித்துவிட்டார். அதன் மீதான விளக்கம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உரிமை மீறல் பிரச்சினைக் குறித்து கேட்டிருந்தீர்கள். அது பற்றிப் பேச உங்கள் உறுப்பினருக்கு அனுமதி கொடுத்தேன். ஏன் என்பதற்கு காரண, காரியங்களை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் கேள்வி எழுப்பிய காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்ல நான் அழைத்திருக்கிறேன். அவர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவ்வளவுதானேயொழிய, குறுக்கே இதிலே யாருடைய விளக்கமோ, point of order-ஓ ஒன்றும் வராது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, இதற்கு மேலே எதுவுமே வராது. நான் அனுமதிக்க முடியாது. அவர் பதில் சொன்னதற்குப் பிறகு நான் தீர்ப்பு சொல்வேன். அவ்வளவுதான். இது இவ்வளவுதான். இதற்கு மேற்கொண்டு வாய்ப்பு இல்லை. மாண்புமிகு அமைச்சர் விளக்கத்தை முடிக்கவும்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு திரு. க பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் இந்த நிகழ்ச்சி நடந்த அடுத்த நாள் இலங்கை வட மாகாணத்தின் முன்னாள் முதல்வர் Justice C.V. விக்னேஸ்வரன் அவர்கள், தமிழகத்திற்கு வந்து தமிழகத்தின் நிலைப்பாடு, அரசினுடைய நிலைப்பாடு என்பது மிகவும் சரியானது என்று தெளிவாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். தமிழகத்தின் நிலைப்பாடு, இரட்டைக் குடியுரிமை சார்ந்த நிலைப்பாடு. இதே இடத்திற்கு வந்து திரு. C.V. விக்னேஸ்வரன் சொல்லியிருக்கிறார். அதே திரு. இளம்பரிதி அவர்கள் எங்களுடைய நிலைப்பாட்டை அங்கீகரித்து அறிக்கை விட்டிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரைக்கும் கண்டிப்பாக இரட்டைக் குடியுரிமை என்பதன்மூலம் OCI-ல் கிடைக்கிற அதே வசதிகள் கிடைக்கும். OCI-யைப் பொறுத்தவரையிலும் இங்கே ஓட்டு போட முடியாது. ஆனால்,இங்கேவந்துசிலசொத்துக்களைவாங்கலாம்.வேலைவாய்ப்பு கிடைக்கும்; Private Sector-ல் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். இந்தக் கேள்விக்கு திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். 2 இலட்சம் பேர்களுக்கு OCI–Overseas Citizenship of India 1984 ஆம்

[திரு. க. பாண்டியராஜன்] [2020 பிப்ரவரி 18

ஆண்டிலிருந்து இன்று வரை அளிக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் அங்கிருக்கிறவர்கள் OCI மூலமாக அவர்கள் ஏற்கெனவே பெற்றிருக்கிறார்கள். இன்னும் பெறுவதற்குத் தடைகள் இல்லை. ஆனால், Refugees-ஆ அல்லது Repatriates-ஆ என்று classify செய்வதில் கேள்வி இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரு. அமித்ஷா அவர்களைச் சந்தித்து, இதுதொடர்பாக கோரிக்கை விடுத்திருக்கிறார். வெளிப்படையாக, பகட்டான வார்த்தைகளால் பேசாமல் இலங்கைத் தமிழர்களுக்கு நல்லது செய்கிற அரசாங்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் பொறுத்தவரைக்கும், எவ்வளவு quiet ஆக இவ்வளவு சாதித்திருக்கிறோம். இன்றைக்கு திரு. C.V. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழகம் வந்து அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு சரியானது என்றும், அவர்களை எப்படி நீங்கள் அண்ணன் தம்பிகளாக treat செய்து எல்லா விஷயங்களையும் செய்து கொடுக்கிறீர்கள் என்பதிலிருந்து அவர்கள் smooth ஆக அங்கே போவதற்கு வரை எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தீர்கள் என்று தெரிவித்துள்ளார்கள். 90,000 விதவைத் தாய்கள் அங்கே இருப்பவர்களுக்கு சேவா மூலமாகப் பயிற்சியளித்து, அவர்களுக்கு மிக, மிக முக்கியமான வாழ்வாதாரத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. தமிழக அரசாங்கம் கொடுத்த அழுத்தத்தினால் மத்திய அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் செய்து கொண்டிருப்பதனால்தான், இங்கே பாருங்கள் நாங்கள் செய்தது இது, நீங்கள் என்ன செய்தீர்கள்? முள்ளிவாய்க்கால் மறந்து விட்டதா? (குறுக்கீடுகள்) முள்ளிவாய்க்காலில், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், விளக்கத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** நீங்கள் எடுத்த நிலைப்பாடோ, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நிலைப்பாடோ, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் எடுத்த நிலைப்பாடோ எந்தத் தவறும் கிடையாது. இரட்டைக் குடியுரிமை என்பதற்கு interpretation இருக்கிறது. அந்த interpretation-ல் ஒன்று ஒரு பக்கம் அவர்களுக்கு குடியுரிமை,

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள், உட்காருங்கள்.

*2020 பிப்ரவரி 18]*

**மாண்புமிகு திரு. க பாண்டியராஜன்:** இங்கே வந்து அவர்களுக்கு OCI கொடுப்பதற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது. நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள், (குறுக்கீடு) இருங்கள், உட்காருங்கள். அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்களால் ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டு, அதுகுறித்து சம்பந்தப்பட்ட வேறோர் உறுப்பினரான மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் அளித்ததற்குப் பின்னால், இதில் எவ்வித அவை உரிமை மீறலும் இல்லையென்று தீர்ப்பு வழங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

*இல்லை, இல்லை (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது உங்களுடைய உரிமை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** மைக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மைக் கொடுத்தாகிவிட்டது.*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமை பிரச்சினையிலே இரண்டுதான். ஒன்று உரிமை மீறல் உண்டா, இரட்டைக் குடியுரிமையா, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் அதைப்பற்றி விளக்கம் சொல்ல முடியாது. நான் ஒரு தீர்ப்பு சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் ஒரு தீர்ப்பு சொல்லிவிட்டேன். அந்தத் தீர்ப்பின் மேலே நீங்கள் மேற்கொண்டு எதுவும் பேச முடியாது. வேறு ஏதாவது பிரச்சினை சொல்வதாக இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) வேறு பிரச்சினை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

*முற்பகல் 11–45*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் உரைத்த தீர்ப்பின்மீது நான் எந்தக் கருத்தையும்

[திரு. துரைமுருகன்] [2020 பிப்ரவரி 18

சொல்லமாட்டேன். தங்களுடைய தீர்ப்புதான் இறுதியானது என்பதை நான் அறிவேன். ஏனென்று கேட்டால் இன்னும் பல தீர்ப்புகளை நீங்கள் சொல்லப் போகிறீர்கள். ஆகையினால் நாங்கள் இப்போது வெளிநடப்புச் செய்யப் போகிறோம். ஆனால், என்ன சொல்லிவிட்டுப் போகிறோம் என்று கேட்டால், இரட்டைக் குடியுரிமை கொடுக்க முடியாது என்று மத்திய சர்க்கார் சொல்கிறது. அவர்கள்தான் கொடுக்கிறவர்கள். ஆகையால், இவரால் அது முடியாது. ஆனால், அதைத் திசைதிருப்புவதற்காக ஒரு சவாலாகச் சொல்லியிருக்கிறார். எனவே, அதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

## 3. வரவு–செலவுத் திட்டம், 2020–2021, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2020–2021 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரை வணங்குகின்றேன். பேரறிஞர் அண்ணாவை வணங்குகின்றேன். எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் வாழ்கின்ற இந்திய துணைக் கண்டம் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு. திராவிட இயக்க அரசியலின் அடிப்படையான சமூக நீதி மற்றும் மதச் சார்பின்மை ஆகிய இந்தக் கோட்பாடுகள் இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்தை ஆளுகின்ற மத்திய பா.ஜ.க. அரசால் மிகப் பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. எந்தச் சூழ்நிலையிலும் அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள இந்தியா ஒரு சமத்துவ, மதச் சார்பற்ற, குடியுரிமை பெற்ற நாடு என்ற அடிப்படை கோட்பாட்டில், எள்ளளவு சேதாரமும் வரவிட மாட்டோம். அதுபோன்று, இன்றைக்கு மதத்தின் அடிப்படையில் குடியுரிமை சட்டத் திருத்தம் கொண்டு